பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
18 10 2024 12 40
வெள்ளிக்கிழமை பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. ட்ரோன், இணையதள முறைகேடு உள்ளிட்ட முறைசாரா போர் நடவடிக்கைகளை எதிர்கொள்வதற்கான முயற்சிகளை பாதுகாப்புத்துறை மேற்கொண்டு வருகிறது என்று மத்திய அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் தெரிவித்துள்ளார்.
2. ஜார்க்கண்ட் மாநில சட்டப்பேரவை முதல்கட்ட தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடங்கியது.
   நாட்டில் முதல் முறையாக ஆன்லைனில் மனு தாக்கல் செய்யும் நடைமுறையும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.
3. ஜம்மு-கஷ்மீரில் புதிய அமைச்சர்களுக்கான இலாக்கா பொறுப்புகள் இன்று அறிவிக்கப்பட்டுள்ளது.
4. வடதமிழ்நாடு மற்றும் தெற்கு ஆந்திர பிரதேசத்தையொட்டி வலுவான காற்றழுத்த தாழ்வுப்பகுதி இன்று காலை உருவாகி உள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
5. ரஞ்சிக் கோப்பை கிரிக்கெட்டில் தில்லி அணிக்கு எதிரான ஆட்டத்தில் தமிழ்நாடு அணி உணவு இடைவேளையின்போது விக்கெட் இழப்பின்றி 123 ரன் எடுத்துள்ளது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

ஒரு சில அண்டை நாடுகள் முறைசாரா போர் நடவடிக்கைகளை மேற்கொள்வது நாட்டின் பாதுகாப்புத்துறைக்கு பெரும் சவாலாக உள்ளது என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று பாதுகாப்பு நவீன புதுமை தொழில்நுட்பங்கள் குறித்த நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், ட்ரோன்கள், இணையதளங்கள், உயிரி ஆயுதங்கள், விண்வெளி தாக்குதல் முறைகளை கடைபிடிப்பதால் தொழில்நுட்ப ரீதியாக இவற்றை கண்காணித்து உரிய நடவடிக்கைகளை பாதுகாப்புத்துறை மேற்கொண்டு வருவதாக தெரிவித்தார்.

பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை ஊக்குவிப்பதற்கு மத்திய அரசு உரிய நடவடிக்கைகள் எடுத்து வருவதாகத் தெரிவித்த அவர், முறைசாரா போர் நடைமுறைகளை தடுப்பதற்குத் தேவையான நவீன தொழில்நுட்பங்களையும் கொண்டு வருவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகக் கூறினார்,

நாட்டின் பாதுகாப்புத்துறையை தொழில்நுட்பம் சார்ந்த புதுமையான துறையாக தரம் உயர்த்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு முழுவீச்சில் செயல்படுத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

காலச்சூழலுக்கு ஏற்ப போர்க் கருவிகள் மற்றும் தளவாடப் பொருட்களை தொழில்நுட்ப ரீதியாக மாற்றங்கள் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

பாதுகாப்புத்துறையின் பணிகளை மேம்படுத்தும் வகையில் தனியார் துறையினரும் இதில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக திரு ராஜ்நாத்சிங் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

ஜார்க்கண்ட் மாநில சட்டப்பேரவைக்கு முதல்கட்டமாக அடுத்த மாதம் 13-ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறவுள்ள 43 தொகுதிகளில் இன்று வேட்புமனு தாக்கல் தொடங்கியது.

வேட்புமனுக்களை தாக்கல் செய்ய இம்மாதம் 25-ஆம் தேதி கடைசி நாளாகும்.

வேட்புமனு மீதான பரிசீலனை 28-ஆம் தேதி நடைபெறவுள்ளது.

வேட்புமனுக்களை திரும்பப் பெற இம்மாதம் 30-ஆம் தேதி கடைசி நாளாகும்.

வாக்கு எண்ணிக்கை அடுத்த மாதம் 23-ஆம் தேதி மேற்கொள்ளப்படும்.

ஜார்க்கண்டில் வேட்புமனு தாக்கல் தொடங்கியதை அடுத்து அங்கு அரசியல் நடவடிக்கைகள் சூடுபிடித்துள்ளன.

**[]<<<>>>[]**

இந்நிலையில் நாட்டில் முதல் முறையாக ஆன்லைனில் வேட்புமனு தாக்கல் செய்யும் நடைமுறை ஜார்க்கண்ட் மாநிலத்தில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இதனை அறிவித்த அம்மாநில தலைமை தேர்தல் அதிகாரி திரு கே ரவிக்குமார், **Suvidha.eci.gov.in** என்ற ஆன்லைன் சேவை தளத்தில் வேட்பாளர்கள் தங்களது மனுக்களை பதிவு செய்யலாம் என்று தெரிவித்தார்.

வேட்புமனு படிவத்தை பூர்த்தி செய்த பின் மனு தாக்கலுக்கான டெபாஸிட் தொகையை செலுத்த வேண்டும்.

பிரமாணப் பத்திரத்தையும் ஆன்லைனில் தாக்கல் செய்தபின் பூர்த்தி செய்து சமர்ப்பிக்கப்பட்டதற்கான ஒப்புகைச்சீட்டை பதிவிறக்கம் செய்து தேர்தல் அலுவலரிடம் அளிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

ஜம்மு-கஷ்மீரில் பதவியேற்றுள்ள புதிய அமைச்சர்களுக்கான இலாக்கா பொறுப்புகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக துணைநிலை ஆளுநர் திரு மனோஜ் சின்ஹா வெளியிட்டுள்ள உத்தரவில், துணை முதலமைச்சராக திரு சுரீந்தர் குமார் சௌத்திரி செயல்படுவார் என்றும், பொதுப்பணித்துறை, வர்த்தகம் மற்றும் தொழில்துறை, சுரங்கத்துறை, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, திறன் மேம்பாட்டுத்துறை, ஆகிய பொறுப்புகளையும் அவர் கவனிப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகதாரம், பள்ளிக்கல்வி, உயர்கல்வித்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள சஹீனா மஜீத்-க்கு சமூக நலத்துறையும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நீர்வளம், வனத்துறை, சுற்றுச்சூழல் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சராக ஜாவித் அகமது ராணா நியமிக்கப்பட்டுள்ளார்.

வேளாண்மை, ஊரக வளர்ச்சி, பஞ்சாயத்துராஜ், கூட்டுறவுத்துறை திரு ஜாவித் அகமது தர்-க்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திரு சதிஷ் சர்மாவுக்கு உணவு மற்றும் நுகர்வோர் நலன், போக்குவரத்து, அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் இளைஞர் நலத்துறை ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த பட்டியலில் ஒதுக்கீடு செய்யப்படாத இலாக்காக்கள் முதலமைச்சரின் பரிந்துரையின் பேரில் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் துணைநிலை ஆளுநரின் உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

வடதமிழ்நாடு மற்றும் தெற்கு ஆந்திர பிரதேசத்தையொட்டியுள்ள ராயலசீமா பகுதியில் வலுவான காற்றழுத்த தாழ்வுப்பகுதி இன்று காலை உருவாகி உள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது இன்று பிற்பகலில் காற்றழுத்த தாழ்வுப்பகுதியாக வலுவிழக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்கால் மற்றும் தெற்கு கர்நாடகா, குஜராத் பகுதிகளில் அடுத்த மூன்று நாட்களுக்கு ஆங்காங்கே கனமழைபெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு, மத்திய மகாராஷ்டிரா, கோவா, கரையோர ஆந்திரபிரதேசம், ஏனம், ராயலசீமா, தெலங்கானா பகுதிகளில் அடுத்த ஐந்து நாட்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

இதனிடையே தமிழகத்தில் அடுத்த ஐந்து நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

*( சவுண்ட்பைட் - செ க ) -43--- செகண்ட்*

**[]<<<>>>[]**

தில்லி மற்றும் புறநகர் பகுதிகளில் குளிர்காலம் தொடங்குவதையொட்டி கடுமையான பனிமூட்டம் காணப்படுகிறது.

மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் இன்று காலை காற்று மாசு-வின் அளவு 292-ஆக பதிவாகி இருப்பதாக தெரிவித்துள்ளது.

காற்று மாசுபடுவதால் பெரும்பாலான தில்லி மற்றும் புறநகர் பகுதி மக்களுக்கு மூச்சுத் திணறல் ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து தில்லி அரசின் தலைமைச் செயலகத்தின் அதிகாரிகள் சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து அவசரக் கூட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

தில்லி மற்றும் சுற்றுப்புறப் பகுதிகளில் காற்றின் மாசுபாடு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் முகாம்கள் நடத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

13 இடங்களில் காற்றின் தரத்தை கண்காணித்து நடவடிக்கை எடுப்பதற்கான பசுமை கட்டுப்பாட்டு அறைகளும் அமைக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தில்லி சாலைகளில் போக்குவரத்துக்கு பாதிப்பு ஏற்படுவதை தடுக்கும் வகையில் மேகக்கூட்டங்களைக் கலைப்பதற்காக பொதுப்பணித்துறை மூலம் தண்ணீர் பீய்ச்சி அடிக்கப்படுவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

**[]<<<>>>[]**

மத்தியப்பிரதேச மாநிலம், **Datia** அரசு மாவட்ட மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரியில் மகளிர் பாதுகாப்பிற்காக எச்சரிக்கை கருவி பொருத்தப்பட்டுள்ளது.

மருத்துவமனையில் பணிபுரியும் பெண் ஊழியர்களின் பாதுகாப்பிற்காக இந்த கருவி பொருத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

பெண் ஊழியர்களுக்கு ஆபத்து ஏதும் ஏற்பட்டால் அவர்கள் இந்த எச்சரிக்கை கருவியை அழுத்தியவுடன், ஐந்து நிமிடங்களுக்குள் பாதுகாப்பு பணியாளரகள் விரைந்து சென்று அவர்களை மீட்க முடியும் என்று அவர் கூறுகிறார்.

மருத்துவமனையின் மூன்று தளங்களிலும் பணியாளர்களின் அறையில் இந்த எச்சரிக்கை கருவி பொருத்தப்பட்டுள்ளது.

மத்தியப்பிரதேச மாநிலத்தில் மகளிரின் பாதுகாப்பிற்காக முதல்முறையாக **Datia** அரசு மருத்துவமனையில் இந்த வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

மொரீசியஸ் நாட்டில் புதிய தண்ணீர் குழாய் அமைப்பதற்கான திட்டத்திற்காக இந்தியா 487 கோடி ரூபாய் கடன் வழங்கியுள்ளது.

இதன்மூலம், அந்நாட்டில் சுமார் 100 கிலோமீட்டர் தொலைவிற்கு புதிய தண்ணீர் குழாய்கள் அமைக்கப்படவுள்ளது.

பாரத ஸ்டேட் வங்கியின் மூலம் இந்த நிதியுதவி அளிக்கப்படுகிறது.

இதற்கான கடிதத்தை வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர், மொரீசியஸ் வெளியுறவு அமைச்சர் திரு **Maneesh Gobin-**னிடம் வழங்கினார்.

**[]<<<>>>[]**

தமிழ்நாடு – தில்லி அணிகளுக்கு இடையேயான ரஞ்சிக் கோப்பை கிரிக்கெட் போட்டி இன்று தொடங்கியது.

தில்லியில் நடைபெற்று வரும் இப்போட்டியில் டாஸ் வென்ற தில்லி அணி முதலில் பந்துவீச தீர்மானித்தது.

இதையடுத்து களமிறங்கிய தமிழ்நாடு அணி உணவு இடைவேளை வரை விக்கெட் இழப்பின்றி 123 ரன் எடுத்துள்ளது.

**[]<<<>>>[]**

பெங்களூருவில் நடைபெற்று வரும் இந்திய அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் தற்போது ஆடி வரும் நியூஸிலாந்து தனது முதல் இன்னிங்ஸில் சற்று முன் வரை ஏழு விக்கெட் இழப்புக்கு 363 ரன் எடுத்துள்ளது.

இந்தியா முதல் இன்னிங்ஸில் 46 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

**[]<<<>>>[]**

டென்மார்க் ஓபன் பேட்மிண்டன் போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் பி வி சிந்து - இந்தோனேஷியாவின் **Gregoria tuniung**-யை எதிர்கொள்கிறார்.

ஒடெசேயில் நடைபெறும் இப்போட்டி இந்திய நேரடிப்படி மாலை மணி 4-10-க்கு தொடங்குகிறது.

[]<<<>>>[]

ஐ எஸ் எல் கால்பந்துப் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் பெங்களூரு — பஞ்சாப் அணிகள் மோதுகின்றன.

பெங்களூருவில் இப்போட்டி இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

[]<<<>>>[]